# புறநானூற்றுக் கையறுநிலைப் பாடல்களில் உளவியல்

# Puranaanutru Kaiyarunilai Padalgalil Ulaviyal

***சி. ஜோதிலட்சுமி***
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வியல் துறை
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர்

**C. Jothilakshmi**
*Ph.D. Research Scholar (Full-Time)*
*Post Graduate and Tamil*
*Department of Research*
*Sacred Heart College (Autonomous)*
*Tirupattur*

## ஆய்வுச் சுருக்கம்

*சங்க இலக்கியப் பாடல்களில் கையறுநிலைப் பாடல்களை உளவியல் செய்திகளோடு ஒப்பிட்டு புலவர்களின் இரக்க உணர்வுகளையும் துன்பங்களையும் வறுமைகளையும் அறிந்துக் கொள்ள முடிகிறது. மக்களின் உள்ளமானது நம்பிக்கையை இழக்கும் நிலையில் இறப்பு இயல்பூக்கம் தோன்றுகிறது. இன்பத்தினை இழக்கும் நிலையில் இயல்பூக்கம் அதிகமாகிறது. நற்றிணை, பதிற்றுப்பத்து போன்ற பாடல்களில் கையறுநிலையில் உளவியல் செய்திகளை அறிய முடிகிறது. புறநானூற்றுப்பாடல்களில் சமூக உளவியல், மன உளவியல், ஒத்துணர்வு, தன்முனைப்பு போன்ற இன்னும் பல உளவியல் செய்திகளை அறிந்துக் கொள்ள முடிகிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *உளவியல், கையறுநிலை, இயல்பூக்கம், தாழி, முதுமக்கள் தாழி, வன்னி மரம், கைம்மை, சிதை, ஆரவாரம், ஒத்துணர்வு, பகன்றைமலர்*

## Abstract

*In the Sangam literature, we can compare the poems of helplessness with psychological messages to understand the compassion, sufferings and poverty of the poets. When the hearts of the people lose hope, the nature of death appears. In the event of loss of pleasure, the instinct swells. In songs like Natrinai and Pathiruppathu, psychological messages can be seen in a helpless manner. In Purananuru songs, we are able to learn many more psychological messages such as social psychology, mental psychology, empathy, egoism, etc.*

***Keywords:*** *Psychology, Helplessness, Instinct, Thaali, Old People's Thaali, Vanni Tree, Kaimmai, Pitha, Shouting, Harmony, Paganrai Malar.*

**Citation**

Jothilakshmi, C. "Puranaanutru Kaiyarunilai Paadalgalil Ulaviyal." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 4, 2023, pp. 11–16.

**முன்னுரை**

*உளவியல் என்பது உள்ளத்தைப் பற்றிய அறிவியல். உள்ளத்து வெளிப்பாடான உணர்வுகளின் களமே இலக்கியம், சங்க இலக்கியத்தில் உள்ள கையறுநிலைப் பாடல்களின் மீதான உளவியல் ஆய்வு மிக முக்கியமானதாகும். சங்க இலக்கியத்தை உளவியல் இலக்கியம் என்றே உரைக்கலாம். அகத்திணைப்பாடல்கள் நூற்றுக்கு நூறும், புறத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு எழுபத்தைந்து சதவிகிதமும் உளவியல் பற்றியனவே என்பதை உரைக்கிறது. ஏதேனும், ஒரு மனநிலையை மட்டுமே அல்லது அம் மனநிலை விளைவுக்குரிய சூழலை மட்டுமே அவைப் பாடுபொருளாய்க் கொண்டவை. உளவியல் கொள்கைகளையும், பிராய்டு, ஜஸ்கு என்பாரின் பாலியல், உளவியல் பகுப்பாய்வுகளையும் கற்றுணர்ந்தால் சங்க இலக்கியக் கல்விக்கு அது பெரிதும் துணைபுரியும். சங்க இலக்கியப் பாடல்களில் உள்ள கையறுநிலைப் பாடல்கள் உளவியல் அடிப்படையில் அமைந்துள்ளதை இக்கட்டுரை ஆராயவுள்ளது.*

**உளவியல்**

*உளவியல் என்பது மனித உள்ளத்தின் உண்மைகளை எடுத்து விளக்குவதாகும், சைக்கி* (Psyche) *லோகஸ்* (Logus) *எனும் இரு கிரேக்க சொற்களும் இணைந்து சைக்காலஜி* (Psychology) *என்று வழங்கப்படுகிறது. மனிதன் தன் எண்ணங்களை, கொள்கைகளை, ஆர்வத்தினைப் பல்வேறு சமுதாயச் சூழல்களில் வெளியிடுகின்றான். சமுதாயப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதில் பிறரிடமிருந்து வேறுபடுகிறான். சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்கிறான். மனம் - சமுதாயம் - இலக்கியம்* (Lit, Mind And Society) *என்ற தொடர்பு மனிதனது மொழிப் பயன்பாட்டையும் அவனது சமுதாய வாழ்க்கையையும் தொடர்புப் படுத்தி நமக்கு விளக்குகிறது. உளவியன் தந்தை என்று போற்றப்படுபவர் சிக்மண்ட் ஃபிராய்டு, நனவிலி மனமே இவரது முதல் ஆய்வுக்களம், தமது நனவிலி மனக் கோட்பாட்டின் படியே இறப்புகள் குறித்தும் ஆராயத் தலைப்பட்டனர்.*

**கையறுநிலையும் உளவியலும்**

*இறப்பு குறித்த இயல்பூக்கம் மனித வாழ்வின் இயக்கம்/ இவை மனநிலையில் பட்டுப் புலவர்களுக்குக் கையறுநிலைப் பாடல்களைத் தோற்றுவிக்கின்றன. இதன் வெளிப்பாடே சங்க இலக்கியப் பாடல்களில் புலவர்களின் கையறுநிலை மிளிர்கின்றன. மக்களின் உள்ளமானது நம்பிக்கையை இழக்கும் நிலையில் இறப்பு இயல்பூக்கம் தோன்றுகிறது. இன்பத்தினை இழக்கும் நிலையில் இயல்பூக்கம் அதிகமாகிறது. இதன் வெளிப்பாடு மக்கள் தங்களை உயிர்விட முனைகின்றனர்.*

***உயிர் செலந் துணிதரு மாலை*[2]**
***அருந்துயர் உழத்தலின் உண்மை சான்றாம் எனப்***
***பெரும் பிறி தின்மையின் இலேனும் அல்லேன்*[3]**

*எனும் நற்றிணையில் பாடல் வரிகள் இறப்பு உணர்த்தும் இயல்பூக்கத்தை உரைக்கிறது. இறப்பு நிலையைத் தாங்க இயலாத நிலையில் கையறுநிலைப் பாடல்கள் எழுகின்றன. என்பதற்கு இது ஒரு உளவியல் சான்றாகும்.*

**பதிற்றுப்பத்தில் கையறுநிலையும் உளவியலும்**

*வாழ்வில் நேரும் சூழ்நிலைத் தடைகளுள் போரும் போரால் நேரும் அழிவும் குறிப்பிடத் தக்கன. போரினால் வளமிக்க ஊர்கள் பாழாகின்றன.*

***நாடுகளின் அழிய நாமம் தோற்றிக்***
***கூற்றவே நின்ற யாக்கை போல்***
***நீரிவந் திறந்த நீரழி பாக்கம்***
***விரிபூங் கருப்பின் கழனி புல்லென்[4]***

*என்பதில் பகைவரின் நாடானது அழகுக் கெடுமாறு அந்நாட்டின் உயிர்களுக்கு அச்சத்தைத் தோற்றுவித்தது. மேலும் அரசன் வெகுண்டு தானையுடன் முற்றுகையிட்டதால் இயமனால் அழிக்கப்படும் யாக்கை புல்லெனப் பொலிவற்றுப் போவதைப் போல் தம் இயல்பு அழிந்த கரும்பு விளையும் வயல்கள் பொலிவற்று விளங்குவதை உணர்த்துகின்றன. மேலும்*

***ஆங்குப் பண்டு நற் கறியுநர் வெழுவள நினைப்பின்***
***நோகோ யானே - நோதக வருமே[5]***

*என்ற அடிகள் போரின் பின் நாணுவோரின் நெஞ்சு நோவத் தக்க வருத்தத்தை ஏற்படுத்தும் என்று எண்ணி வருந்தும் புலவரின் துன்ப நிலை கையறுநிலைப் பாடலாக எடுத்துரைக்கப்படுகிறது. இவ்வாறு போரால் நேரும் அழிவுகளும் மரணங்களும் மனதைத் தாக்கிச் சீர்குலைப்பன. ஒவ்வொரு மரணத்திலும் அவலங்களும் உள்ள முறிவுகளும் விளைகின்றன. போரில் இறந்தவரைப் புதைப்பதும் எரியூட்டுவதுமாகிய இருவகை வழக்கம் இருந்தன. கடலால் சூழப்பெற்ற பரந்த இந்த நில மண்டலத்தை ஆட்சி செய்து வந்து, இனிதாகத் தம் வாழ்நாட்களைக் கழித்து இறந்த மன்னரின் உடலை மண்ணாற் செய்த பானைக்குள் வைத்துப் புதைத்தமையை*

***துளங்கு நீர் வியலகம் ஆண்டினது கழிந்த***
***மன்னர் மறைந்த தாழி***
***வன்னி மன்றத்து விளங்கிய நாடே[6]***

*இவ்வாறு கையறுநிலையாக வடித்துள்ளார். மேலும், தாழி என்பது முதுமக்கள் தாழி, வன்னி மன்றம் என்பது சுடுகாட்டில் வன்னி மரம் நிற்கும் மரத்தடி என்பதும் அறியலாம்.*

*பெருஞ்சேரல் இரும்பொறையின் பகைவர்கள் முன்புஒருநாள் தம் பகைவரைப் போரில் வெற்றிக் கொண்டனர். அவ்வெற்றிக் களிப்பில் கையை வீசி துணங்கைக் கூத்தை அம்மன்னர்கள் ஆடினர். ஆனால் அவர்கள் சேரனோடு செய்தப் போரில் பிணமாயினர்[7] என்று பதிற்றுப் பத்து உரைக்கிறது.*

**மனநிலை உளவியல்**

*இன்ப, துன்பங்கள் பொருள்களிலும் ஆழ்நிலைகளிலும் மட்டுமில்லை, நுகர்வோரின் மனதையொட்டி அவைப் பெரிதும் மாறுகின்றன[8] என்பது மு.வ.வின் கருத்து. மனநிலை உற்ற தன்மையை,*

***வள்ளிதழ் அவிழ்தே தாமரை***
***நள்ளிரும் பொய்கையும் நீயுமோர் அற்றே[9]***

*என்ற வரிகளில் பெருங்கோப்பெண்டு பேசுகின்றாள். கணவன் இறந்தப் பின்பு தனக்குக் கிடைக்கப்போகும் கைம்மைத் துயரை விடக் கணவனின் சிதையில் வீழ்ந்து மறைதல் பெருமைத் தரத் தக்கது என்கின்றாள். தீயும் தாமரைக் குளமும் ஒன்றாதல் இவற்றின் இயல்பினால் அல்ல. அவற்றை அணுகுவோரின் மனநிலைமையில் தான் என்னும் உளவியல் கருத்துப் பெறப்படுகிறது. மனிதனுக்குக் கிட்டும் இன்ப, துன்ப உணர்வுகள் அவை நிகழ்ந்த இடத்தை மட்டும் மனதைச் சார்ந்துள்ளது.*

***இரும் பேர் ஒக்கல் கோடியர் இறந்த***
***புன்றலை மன்றங் காணின் வழிறநாள்***
***அழுங்கல் மூதூர்க் கின்னா தாரும்***[10]

*என்ற பாடல் காட்டும் இன்னாமை மனதில் தோன்றுவதாகும். குலையை விரும்பாதவர்க்குக் கலைஞர்கள் தங்கியிருக்கும் நாளில் இவையெல்லாம் வெற்று ஆரவாரம் என்ற வெறுப்பும், கலைஞர்கள் நீங்கிய பின்பு நிறைவான அமைதி என்ற விருப்பம் தோன்றக் கூடும். ஆகவே, ஓரிடத்தொடு தொடர்புக் கொள்ளும் மனத்தின் உணர்வாகி விடுவதாக[11] உளவியல் அறிஞர் து. சிவராஜ் கருதுகின்றார்.*

**புறநானூற்றுக் கையறுநிலைப் பாடல்களில் சமூக உளவியல்**

*சமூகப் பிரச்சினைகளை அறிவியல் முறையில் ஆராய்ந்து தீர்ப்பதற்கு உளவியல் உண்மைகளைப் பயன்படுத்தும் முறையே சமூக உளவியல், கையறுநிலைப் பாடல் இயற்றிய புலவர்கள், தன்னைச் சார்ந்த அரசர்கள் மற்றும் அவனைச் சார்ந்த மக்கள் இவற்றோடு தொடர்புடையதால் சமூக உளவியலோடு பொருத்தி வருகிறார்கள். சமூக உளவியல் தனி மனிதன் புறச் சூழ்நிலையில் சமூகத்துடன் கொள்ளும் தொடர்பை மட்டுமின்றி அகவழியில் நிகழும் சமூக நடத்தையையும் ஆராய்கிறது.*

**ஒத்துணர்வு**

*மனிதன் சமூகத்துடன் ஒன்றி வாழத்துணைச் செய்யும் துலங்கல்கள் பல. அவற்றுள் ஒத்துணர்வும் ஒன்று. மனிதர்கள் நெருங்கி வாழ்வதால் ஒத்துணர்வு பிறக்கிறது. தாயின் மனதில் தனது குழந்தையிடம் பரிவு உணர்ச்சி உண்டாவதுபோல், பாரி இறந்த பொழுது அவனுடைய மகளிரை அழைத்துக்கொண்டு பறம்பு மலையை விட்டு சென்றனர். இந்நிகழ்வு கபிலரையும் பாரி மகளிரையும் பாதிப்புக்குள்ளாக்கியது. இவர்கள் பறம்பு மலையை விட்டுச் சென்றதும் பறம்பு மலை யாருமில்லாமல் அழிந்துப் போனது என்பது இவர்கள் மூலம் புலவர்க்கு இருந்த ஒத்துணர்வு புலனாகிறது.*

***ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும் சிறு வரை***
***சென்று நின்றோர்க்கும் தோன்றும் மன்ற***
***களிறு மென்று இட்ட கவளம் போல்***
***நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறப்***
***வாள் அசம்பு ஒழுகு முன்றில்***
***தேர் வீசு இருக்கை நெடியோன் குன்றே***[12]

*என்று பாரி உயிருடன் இருந்தபோது அவனுடையப் புகழ் குன்றைப் போல் உயர்ந்து இருந்தன என்று பாடுவது பாரிக்கும் புலவர்க்கும் இருந்த ஒத்துணர்வையே காட்டுகின்றது. இது ஒரு உளவியல் பொருத்தமாகும்.*

**தன்முனைப்பு**

*தேவைகளை நிறைவேற்றிக் கொள்பவர்களைத் தன் முனைப்பாளர்கள் என்கிறது உளவியல், இதன்வழி , புறநானூற்றில் ஔவையார்,*

***இனிப் பாடுநரு மில்லைப் பாடுநர்க் கொன்றீரு ஒருவருமில்லைப்***
***பணிந்துறைப் பகன்றை நறைக் கொண் மாமலர்***

***சூடாது வைகியாங்குப் பிறர்கொன்***
***நீயாது வீயு முயிர்தவப் பலவே'[13]***

*என்று இனிப் பாடுவோரும் இல்லை. பாடுவோருக்கு ஒன்று ஈவோரும் இல்லை. குளிர்ந்த நீர்த்துறையில் உள்ள தேனொழுகும் பெரிய பகன்றை மலரைச் சூடுவோர் இல்லாது வீணாவது போல் பிறருக்கு ஒரு பொருளையும் கொடுக்காது வாழ்ந்து இறப்பார் மிகப் பலர் என ஔவையார் அதியமான் இறந்த வழி தன் முனைப்பைக் காட்டுவதாகக் கையறுநிலைப் பாடல் அமைகிறது.*

**மீறிய முனைப்பு**

*நிறைவேற்ற முடியாமல் தன் தேவை விட்டுக் கொடுத்து வாழ்பவர்கள் மீறிய முனைப்பாளர்கள் என்கிறது உளவியல். பொருளாதாரக் குறைப்பாட்டினால் தேவைகளையோ ஆசைகளையோ நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் இடர்படுபவரே நிரம்ப உள்ளனர். சமூகத் தடைகளால் தேவைகளும் ஆசைகளும் முடங்கிப் போகின்றன. இதற்கடுத்த நிலையில் தத்தம் சூழல்களால் ஏற்படுமத் தடைகள் காரணமாகத் தேவைகள் கனவாகவே உள்ளன. ஆனால்,*

***நினைக்கும் காலை மருட்கை யுடைத்தே***
***எனைப் பெருஞ் சிறப்பினோ டங்கிது துணிதல்***
***அன்னோனை யிழந்த இவ் வுலகம்***
***என்னாவது கொ லளியது தானே'[14]***

*இதன்வழி, கோப்பெருஞ்சோழன் நாட்டை நன்றாக ஆட்சிச் செய்யக் கூடியவன். அவன் அரசாட்சியை விடுத்து வடக்கிருத்தல் போவதாக முடிவெடுத்தான். அதனை நினைக்கும் போது வியப்பினை உணர்த்துகிறது. இவர் வடக்கிருந்தபோது வேற்று நாட்டினரானப் பிசிராந்தையார் பாடலைக் கேட்டும் அவனது புகழை அறிந்தும் காணாமலே நட்புக் கொண்டார் கோப்பெருஞ்சோழன். நான் இறக்கும்போது என் நண்பன் பிசிராந்தையார் வருவார் எனப் பலமுறை உரைத்தது மீறிய முனைப்பைக் காட்டுவதாக உள்ளது.*

**நிறைவாக**

*கையறுநிலைப்பாடல்களில்காட்டப்படும்வாழ்க்கை இயல்புகளின்உண்மைகளைச்சரியாக அறிந்துக் கொள்ளவும் புலவர்களின் மனதில் ஏற்படும் இரக்கவுணர்வுகளையும் ஆர்வத்தையும் அறிய முடிகிறது. கையறுநிலையில் எழும் துன்பங்களுக்கு உரிய காரணங்களைத் தெரிந்து அவைகள் தீரவழி காண்பதற்கும் இத்தகைய அணுகுமுறை ஆய்வு உதவும். கையறுநிலைப் பாடல்களையும் புலவர்களின் மனநிலையையும் அறிய உளவியல் சிந்தனைகள் பயன்படும். உள்ளத்தின் இயல்பை மிகுதியாகப் பாதிக்கும் ஆற்றல் கொண்ட இக்கையறுநிலைப் பாடல்கள் பற்றிய உளவியல் ஆய்வு பெரும் பயனை உரைத்துள்ளது. கையறுநிலைப் பாடல்களைப் பல கோணங்களில் அணுகி, அதன் இயல்புநிலை, உணர்ச்சி நிலை, உறவு நிலை, இரக்கநிலை, துன்ப நிலை போன்றவற்றை அறிய முடிகிறது. சங்க இலக்கியத்தில் வாழ்ந்த புலவர்கள் பல்வேறு சூழல்களால் தன் எண்ணம் நிறைவேறாமல் அதிருப்தி அடைந்தனர். இழப்புகளால் வாழ்வில் வெறுப்பும் சோகமும் அடைந்தனர். மனமுறிவுக்கு ஆளாகினர். ஒத்துணர்வுகள் வலுப்பெற்று, மன எழுச்சிகளாகி உச்ச நிலையில் மனமுறிவுகளைக கையறுநிலைப் பாடல்களாக உதிர்ந்ததை அறியலாம்.*

**அடிக்குறிப்புகள்**

1. சண்முக சுந்தரம்.சு நாட்டுப்புறவியலின் உளவியல் பார்வை ப - 4
2. சுப்பிரமணியன் சா.வே நற்றிணை மூலமும் உரையும் ப - 325, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. மேலது ப - 338
4. சுப்பிரமணியன் சா.வே பதிற்றுப்பத்து மூலமும் உரையும் ப - 24, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
5. மேலது ப - 49
6. மேலது ப - 79
7. மேலது ப - 131
8. வரதராசன். மு குறுந்தொகைச் செல்வம் ப - 98
9. சுப்பிரமணியன் சா.வே புறநானூறு மூலமும் உரையும் ப - 756, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
10. சுப்பிரமணியன் சா.வே ஐங்குறுநூறு மூலமும் உரையும் ப - 751, மணிவாசகர் பதிப்பகம் சென்னை.
11. சிவராஜ் பா சங்க இலக்கியத்தில் உளவியல் ப - 45
12. சுப்பிரமணியன் சா.வே புறநானூறு மூலமும் உரையும் ப - 626, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
13. சுப்பிரமணியன் சா.வே நற்றிணை மூலமும் உரையும் ப - 285, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
14. சுப்பிரமணியன் சா.வே கலித்தொகை மூலமும் உரையும் ப - 345, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

## References


1. Shanmuga Sundaram, S., Nattupuraviyalin Ulaviyal Paarvai, P. 4.
2. Subramanian, S.V., Natrinai Moolamum Uraiyum, Manivasagar Publishing House, Chennai, P. 325.
3. Subramanian, S.V., Pathiruppathu Moolamum Uraiyum, Manivasagar Publishing House, Chennai, P.24.
4. Varadarajan, M., Kurunthokkai Selvam, P.98.
5. Subramanian, S.V., Purananooru Moolamum Uraiyum, Manivasagar Publishing House, Chennai, P.756.
6. Subramanian, S.V., Ainkurunooru Moolamum Uraiyum, Manivasagar Publishing House, Chennai, P.751.
7. Sivaraj, P., Ilakiyathil Vulaviyal, P.45.
8. Subramanian, S.V., Purananooru Moolamum Uraiyum, Manivasagar Publishing House, Chennai, P.626.
9. Subramanian, S.V., Natrinai Moolamum Uraiyum, Manivasagar Publishing House, Chennai, P.285.
10. Subramanian, S.V., Kaliththogai Moolamum Uraiyum, Manivasagar Publishing House, Chennai, P.345.